தினமணி

**வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் குழு மையம்: அசாம் அரசு அலுவலர்கள் பார்வை**

First Published : 21 Jul 2010 08:58:34 AM IST

விழுப்புரம், ஜூலை 20: தமிழகத்தில் செயல்படுத்தப்படும் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் குழுவின் செயல்பாடுகள் குறித்து கண்டறிய அசாம் மாநிலத்திலிருந்து வந்த வேளாண்மை அலுவலர்கள் செவ்வாய்க்கிழமை பார்வையிட்டனர்.

÷அசாம் மாநில வேளாண்மைத் துறை ஆணையர் மற்றும் செயலர் மிரிஜின்ட்ரா கலிடா தலைமையில் அசாம் விற்பனைக் கழக தலைமை நிர்வாக அலுவலர் சுசில் செப்கான், துணைத் தலைமை நிர்வாக அலுவலர் டிரன் சர்மா ஆகியோர் விழுப்புரம் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு வந்தனர்.

÷இங்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள், நடைமுறைகள் குறித்து கேட்டறிந்தனர். அவர்களுக்கு இது குறித்து தமிழ்நாடு விற்பனை மைய மாநில உதவிச் செயலர் ராமசாமி, இணை இயக்குநர் சுதாகரன், விற்பனைக் குழு துணைச் செயலர் பெரியசாமி, வேளாண் வணிக துணை இயக்குநர் தனவேல், வேளாண்மை அலுவலர் பெரியசாமி, விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் குழுச் செயலர் கண்ணன் ஆகியோர் விளக்கிக் கூறினர்.

÷பின்னர் மிரிஜின்ட்ரா கலிடா நிருபர்களிடம் கூறியது: அசாம் மாநிலத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் கிடையாது. முதல் கட்டமாக ரூ.7 லட்சத்தில் தொடங்க உள்ளோம். இதற்காக தமிழகத்தில் பின்பற்றப்படும் நடைமுறைகள் குறித்து பார்வையிட்டுச் செல்ல வந்தோம்.

÷இங்கு மூட்டைகளை தூக்குவது உள்ளிட்ட சில பணிகளை ஆட்கள் செய்கிறார்கள். அதை இயந்திரத்தின் மூலம் செய்ய திட்டமிட்டுள்ளோம். இங்கு பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இந்த நடைமுறை எங்கள் மாநிலத்தில் இல்லை. அதை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படும்.

÷நாங்கள் 3 நாள்கள் பயணமாக சென்னை, விழுப்புரம், கர்நாடகம் ஆகிய இடங்களுக்கு செல்கிறோம் என்று தெரிவித்தார்.

**கடையம் வட்டாரத்தில் 25 ஏக்கரில் பெருநெல்லி பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

First Published : 20 Jul 2010 10:06:27 AM IST

Last Updated : 20 Jul 2010 10:30:39 AM IST

பாவூர்சத்திரம், ஜூலை 19:  கடையம் வட்டாரத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் பெருநெல்லி சாகுபடி செய்ய விவசாயிகள் விண்ணப்பங்கள் அளித்துள்ளதாக தோட்டக்கலை உதவி இயக்குநர் தெரிவித்தார்.

கடையம் வட்டாரத்தில் பெருநெல்லி சாகுபடி செய்வதற்கு
ஏற்ற கால சூழ்நிலை இருந்தும் குறைந்த அளவே பெருநெல்லி சாகுபடி செய்யப்பட்டிருந்தது. தற்போது ஒரு கிலோ பெருநெல்லி ரூ.20 முதல் ரூ.30 வரை விலை போகிறது.

இதனால் விவசாயிகளுக்கு லாபம் தரும் பயிராக பெருநெல்லி திகழ்ந்து வருகிறது. இதனுடைய மகத்துவம் வெளியே தெரியாத நிலையில் இருந்தது.

இந் நிலையில் பெருநெல்லி சாகுபடியில் உள்ள புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அதன் நன்மைகள் குறித்து தினமணியில் செய்தி வெளியானது. அதன்பின்னர் பெருநெல்லி சாகுபடி செய்ய விரும்புவதாக தோட்டக்கலைத் துறையிடம் பல விவசாயிகள் விண்ணப்பித்துள்ளனர்.

இது குறித்து கடையம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெயக்குமார் கூறியதாவது: வறட்சியை தாங்கிக் கொள்ளும் தன்மை கொண்ட பெருநெல்லிக்கு குறைந்த அளவு நீர் பாசனம் போதுமானது.

இதனால் புன்செய் நிலங்களில் அதிக அளவில் பயிரிட்டு பயன் பெறலாம். இது பற்றி செய்தி பிரசுரமானவுடன் ஒரே நாளில் 25 ஏக்கர் நிலத்திற்கு பெருநெல்லி சாகுபடி செய்ய விவசாயிகள் விண்ணப்பம் கொடுத்துள்ளனர் என்றார் அவர்.

**குமரி மாவட்டத்தில் தொடர் மழை: அனைத்து அணைகளும் மூடல்**

First Published : 20 Jul 2010 09:59:58 AM IST

நாகர்கோவில், ஜூலை 19: கன்னியாகுமரி மாவட்டத்தில் அணைப் பகுதிகளிலும், பிற பகுதிகளிலும் திங்கள்கிழமை இடைவிடாது மழை பெய்தது. தொடர் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து  அதிகரித்துள்ளதுடன் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. பாசனத்துக்காக அணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டது.

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக மிதமான மழை பெய்து வந்தது.  இந்நிலையில், மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் திங்கள்கிழமை பகல் முழுவதும் மிதமான மழை இடைவிடாமல் பெய்தது. மலையோரப் பகுதிகளிலும், நீர்ப்பிடிப்பு பகுதிகளும் பெய்துவரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. குழித்துறை தாமிரபரணி, பழையாறு, வள்ளியாறு ஆகிய ஆறுகளில் தண்ணீர்  பெருக்கெடுத்து ஓடுகிறது.

இரணியல் அருகே வள்ளியாற்றின் குறுக்கே பாலப் பணிகள் நடைபெறுவதால், அப் பகுதியில் இருசக்கர வாகனங்கள் செல்வதற்கு தாற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த  மண்பாலம் தண்ணீரில்

அடித்துச் செல்லப்பட்டது. தொடர் மழையால் கடந்த 2 நாள்களுக்கு முன்னர் பெருஞ்சாணி அணை மூடப்பட்டது. பேச்சிப்பாறை, சிற்றார் அணைகளும் திங்கள்கிழமை மூடப்பட்டன. பரவலாக மழை பெய்வதால் பாசனத்துக்காக அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டுள்ளதாக பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை 44.80 அடியாக இருந்தது. திங்கள்கிழமை 47.50 அடியாக உயர்ந்திருந்தது. பேச்சிப்பாறை நீர்மட்டம் 21.50 அடியில் இருந்து 22.80 அடியாகவும், சிற்றார் 1 நீர்மட்டம் 7.87 அடியிலிருந்து 8.69 அடியாகவும், சிற்றார் 2 நீர்மட்டம் 7.97 அடியிலிருந்து 8.79 அடியாகவும் உயர்ந்தது.

மாவட்டத்தில் விளவங்கோடு, கல்குளம் வட்டங்களில் மழையால் ரப்பர் பால் வெட்டும் தொழிலும், அகஸ்தீஸ்வரம், தோவாளை வட்டங்களில் செங்கல் உற்பத்தி தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது. கோதையாற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் திற்பரப்பு அருவியில் தண்ணீர் கொட்டுகிறது.

மழையளவு: திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகபட்சமாக சிற்றார் 1 மற்றும் முள்ளங்கினாவிளை ஆகிய பகுதிகளில் தலா 25 மி.மீ. மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் உள்ள அணைப் பகுதிகளிலும், பிற இடங்களிலும் பெய்த மழையளவு (மி.மீட்டரில்):

பேச்சிப்பாறை- 18, பெருஞ்சாணி- 13.2, சிற்றார் 2- 23, சுருளோடு- 15, பூதப்பாண்டி- 5.1, கன்னிமார்- 18.2, நாகர்கோவில்- 4.4., புத்தன்அணை- 13.4, ஆரல்வாய்மொழி- 4.2, அடையாமடை- 7, கோழிப்போர்விளை- 9, குளச்சல்- 7.4, கொட்டாரம்- 1.4, இரணியல்- 6.8, ஆனைக்கிடங்கு- 7.2, குருந்தன்கோடு- 4.8.

பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 1113 கனஅடி, பெருஞ்சாணி அணைக்கு 1255 கனஅடி, சிற்றார் 1 அணைக்கு 164 கனஅடி, சிற்றார் 2 அணைக்கு 264 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

நாகர்கோவில் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் திங்கள்கிழமை காலைமுதல் மாலைவரை இடைவிடாத சாரல் மழை பெய்தது. இதனால் நகரில் தாழ்வான பகுதிகளிலும், சாலையோரங்களிலும் தண்ணீர் தேங்கியது.

**"உரங்கள் போதிய அளவு கையிருப்பு உள்ளது'**

First Published : 20 Jul 2010 11:53:49 AM IST

மதுரை, ஜூலை 19: விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் சி.காமராஜ் பேசியதாவது:

மாவட்டத்தில் இந்த பருவத்துக்குத் தேவையான உரங்கள், விதைகள் மற்றும் இடுபொருள்கள் தேவையான அளவு இருப்பில் உள்ளன. குறிப்பாக நெல் விதைகள் 689 மெட்ரிக் டன்களும், சிறுதானியங்கள் 3 மெட்ரிக் டன்களும், பயறு வகைகள் 12 மெட்ரிக் டன்களும், எண்ணெய் வித்துக்கள் 9.2 மெட்ரிக் டன்களும், பருத்தி 2.3 மெட்ரிக் டன்களும் வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

உரங்களை பொருத்தவரை யூரியா 2305 மெட்ரிக் டன், டிஏபி 1300 மெட்ரிக் டன், பொட்டாஷ் 720 ப்óமட்ரிக் டன், காம்பளக்ஸ் உரங்கள் 1670 மெட்ரிக் டன் அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் உரக்கடைகளிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. உயிரி உரங்களும், நுண்ணூட்ட உரங்களும் போதுமான அளவில் இருப்பு உள்ளது.

நெல்விதைகளுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.5 வீதமும், பயறுவகை மற்றும் எண்ணெய்வித்து பயிர் விதைகளுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.12 வீதமும் பருத்தி விதைகளுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.20 வீதமும் மானியம் வழங்கப்படுகிறது என்று ஆட்சியர் தெரிவித்தார்.

**கூட்டுறவு வங்கி கடன் திட்ட விளக்கக் கூட்டம்**

First Published : 20 Jul 2010 12:03:13 PM IST

போடி, ஜூலை 19: மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், விவசாய வளர்ச்சிக்கும் கூட்டுறவு வங்கி கள் மூலம் வழங்கப்படும் கடன் திட்டங்கள் குறித்த விளக்க கூட்டம், மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளர் குருமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

விடியல் தொண்டு நிறுவனம் சார்பில் நடைபெற்ற இக் கூட்டத்தில், உத்தமபாளையம் சரக இணைப் பதிவாளர் அலுவலகம் மற்றும் பொட்டிப்புரம், ராமகிருஷ்ணாபுரம் கூடடுறவு வங்கி ஆகி யவற்றின் ஊழியர்கள் பங்கேற்றனர்.

கூட்டுறவு வங்கிகள் மூலம் சுய உதவிக்குழுக்கள், விவசாயிகளுக்கு உடனடியாக கடன் வழங்க நடவடிக்கை எடுத்து வருவதால், உரிய கூட்டுறவு வங்கிகளை அணுகி பயன்பெறலாம் என கூட் டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் விடியல் - விடிவெள்ளி மகளிர் சங்கங்களின் கூட்டமைப்பை சேர்ந்த பஞ்சாயத்து அள விலான பொறுப்பாளர்கள் பலர் பங்கேற்றனர்.

கூட்ட ஏற்பாடுகளை விடியல் நிறுவன செயலாளர் கண்மணி காமராஜ், வளர்ச்சி மேலாளர் காசி ராஜ், பணியாளர்கள் மீனா, லட்சுமி, நாகஜோதி ஆகியோர் செய்தனர்.

**விவசாயிகள் உண்ணாவிரதம்**

திருவண்ணாமலை: சேத்துப்பட்டு அருகே சீரான மின்சாரம் விநியோகம் செய்ய கோரி விவசாயிகள் சார்பில் உண்ணாவிரதம் நடந்தது.சேத்துப்பட்டு அடுத்த தெள்ளூர் ராந்தம், முருகானந்தல், மருதப்பெரும்பட்டூர், கனகம்பட்டு, விண்ணமங்கலம், நடுப்பட்டு ஆகிய கிராமங்களுக்கு பெரிய கொழப்பலூர் துணை மின்நிலையத்தில் இருந்து மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

விவசாயிகள், நெசவாளர்கள் பயன்பெற்று வருகின்றனர். இந்நிலையில் ஓராண்டுக்கு முன் இப்பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்படததால் பயிர்கள் காய்ந்தன, ஆத்திரமடைந்த விவசாயிகள் பெரிய கொழப்பலூர் துணை மின் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.கடந்த ஒரு வாரமாக சீரான மின்சாரம் விநியோகம் செய்யப்படவில்லை. இதனால், விவசாயம், நெசவுத்தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆத்திரமடைந்த விவசாயிகள், நெசவு தொழிலாளர்கள் பெரிய கொழப்பலூர் துணை மின் நிலையம் முன் மாநில தேசிய விவசாயிகள் சங்க தலைவர் தெள்ளூர் கோட்டீஸ்வரன் தலைமையில் உண்ணாவிரதம் இருந்தனர்.

**."முந்திரி நடவு செய்யும்விவசாயிகளுக்கு மானியம்'**

விருத்தாசலம்: விருத்தாசலம் வட்டார விவசாயிகள் ஒட்டு முந்திரி நடவு செய்தால் மூன்று ஆண்டுகளுக்கு மானியம் வழங்கப்படும் என தோட்டக்கலை உதவி இயக்குனர் அறிவித்துள்ளார்.இதுகுறித்து விருத்தாசலம் தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி விடுத்துள்ள செய்திக் குறிப்பு:விருத்தாசலம் வட்டாரத்தில் முந்திரியில் நெருக்கு நடவு மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் திட்டம் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப் பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒரு எக்டர் காலி நிலத்தில் 5க்கு 4 இடைவெளியில் 500 முந்திரி ஒட்டுச் செடிகளை நடவு செய்ய வேண்டும்.மொத்த மானியமாக 3 ஆண்டுகளுக்கு ஒரு எக்டருக்கு 32 ஆயிரத்து 850 ரூபாய்க்கு  வழங்கப்படுகிறது.

முதல் ஆண்டில் 19 ஆயிரத்து 710 ரூபாய்க்கு முந்திரி ஒட்டு செடிகள், இடுபொருட் கள், நடவு மற்றும் பராமரிப்பு செலவும், இரண் டாம் ஆண்டிற்கு 6,570 ரூபாய் மதிப்பிற்கும், மூன்றாம்

ஆண்டிற்கு 6,570 ரூபாய் மதிப்பிற்கும் மானியம் வழங்கப்படுகிறது.ஆர்வமுள்ள விவசாயிகள் கம்யூட்டர் சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், இரண்டு பாஸ் போர்ட் சைஸ் புகைப் படத்துடன் துறை களப்பணியாளர்களை தொடர்பு கொள்ளலாம். மேலும் விருத்தாசலம் ஒழுங்கு முறை விற்பனைக் கூட வளாகத்தில் உள்ள தோட்டக் கலை உதவி இயக் குனர் அலுவலகத்தில் விவசாயிகள் தேவைப் பதிவேடு பராமரிக்கப்படுகிறது. இந்த பதிவேட்டில் விவரங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

**மா உற்பத்தியில் ஈரோடு வாலிபர்**

ஈரோடு:ஈரோடு அருகே பத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் பல்வேறு வகையான மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.தமிழகத்தில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மாவட்டத்தில் அதிகளவு மாம்பழம் சாகுபடி செய்யப்படுகிறது. இதையடுத்து மலைப்பகுதியில் ஓரளவு மாம்பழம் சாகுபடியாகிறது. ஈரோடு அருகே முத்துக்கவுண்டன் பாளையத்தில் பத்து ஏக்கரில் பல்வேறு வகையான மாம்பழங்களை, சின்னியம்பாளையத்தை சேர்ந்த முனியப்பன் உற்பத்தி செய்கிறார். ""மழை இல்லாததால், இந்தாண்டு மாம்பழம் உற்பத்தி அடியோடு குறைந்துவிட்டது," என, அவர் கூறினார்.

அவர் கூறியதாவது: நாங்கள் முத்துக்கவுண்டன் பாளையம் மற்றும் கரூர் பகுதியில் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து மாமரங்களை பராமரித்து வருகிறோம். இத்தொழிலில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறோம். இங்குள்ள பத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் நீலம், நடுச்சோலை, கிளிமூக்கு, செந்தூரம் ஆகிய மா மரங்களை பராமரித்து வருகிறோம். செந்தூரம், நடுச்சோலை சீஸன் முற்றிலும் முடிந்துவிட்டது. தற்போது, "நீலம்' மட்டுமே விளைச்சல் உள்ளது. அதுவும், முடியும் தருவாயில் உள்ளது.ஓராண்டாக மழை ஏமாற்றியதால், இந்தாண்டு மாம்பழம் உற்பத்தி அடியோடு குறைந்துவிட்டது. ஒரு மரத்துக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 50 கிலோ, அதிகபட்சம் 500 கிலோ மாம்பழம் கிடைக்கும்.சரியான முறையில் உரமிட்டு பராமரித்தால் எதிர்பார்த்த பலன் கிடைக்க வாய்ப்புண்டு.மாமரங்களுடன் ஊடுபயிராக சப்போட்டா, கொய்யா போன்ற மரங்களை நட்டுள்ளோம். மாம்பழம் சீஸன் மிக விரைவில் முடியப்போகிறது. கொய்யா பழம் இனி வரவுள்ளது. மொத்த விலையில், ஒரு கிலோ நீலம் மாம்பழம் 30 ரூபாய்க்கு விற்கிறோம். இந்தாண்டு மழை பெய்தால் மட்டுமே, அடுத்தாண்டு மாம்பழம் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**மானிய விலையில் விதை சேமிப்பு கலன்**

ஈரோடு:மொடக்குறிச்சி வட்டார விவசாயிகளுக்கு மானியத்துடன் விதை சேமிப்பு கொள்கலன் வழங்கப்படுகிறது.மொடக்குறிச்சி, நஞ்சை ஊத்துக்குளி, கருந்தேவன் பாளையம், சாமிநாதபுரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் காய்கறி பயிர் உற்பத்தி அதிகம். மாவட்டம் முழுவதும் பல்வேறு வகையான காய்கறிகள் இங்கிருந்து அனுப்பப்படுகின்றன. கரும்பு, மஞ்சள், வாழை போன்ற பயிர்களும் இங்கு அதிகம் பயிராகின்றன. விதை கிராமம் திட்டத்தின் கீழ், மொடக்குறிச்சி வேளாண் குடோனில் நேற்று விதை சேமிப்பு கொள்கலன் மானிய விலையில் 49 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மேலும், 49 கொள்கலன்கள் இரண்டு நாட்களுக்குள் வழங்கப்பட்டு விடும். இதன் விலை 1,300 ரூபாய். மானியம் கழித்து ஆயிரம் ரூபாய் விலைக்கு வழங்கப்படுகிறது. இவற்றில் 500 கிலோ விதைகளை இருப்பு வைக்க முடியும். மொடக்குறிச்சி வட்டாரத்தில் 25 டன் விதை நெல் வந்துள்ளது. தேவைப்படும் விவசாயிகள் உதவி இயக்குனரை அணுகி மானிய விலையில் விதை நெல் பெற்றலாம். பவானி பண்ணையில் இருந்து விதை நெல் கொண்டு வரப்பட்டுள்ளது.இத்தகவலை மொடக்குறிச்சி துணை வேளாண் அலுவலர்கள் முருகேசன், முருகன் தெரிவித்தனர்.

**செம்மை நெல் சாகுபடிக்கு 3 கிலோ விதை போதும்: இணை இயக்குனர் தகவல்**

நாமக்கல்: "செம்மை நெல் சாகுபடி முறைக்கு மூன்று கிலோ விதை போதுமானது' என, வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) பிரபாகரன் தெரிவித்தார்.அவர் வெளியிட்ட அறிக்கை:மேட்டூர் கிழக்கு கரை வாய்க்கால் தண்ணீர் திறந்து விடப்பட்டவுடன் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட உள்ளது. வடமேற்கு பருவமழை முழுவதும் பெய்து கிணற்றின் நீர்மட்டம் உயரும் வாய்ப்புள்ள உள்ளதால், நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி முறையை பின்பற்றி பயன் பெறலாம். இந்த முறையில் ஏக்கருக்கு 3 கிலோ விதை போதுமானது. குறைந்த பரப்பு பாய்நாற்றங்கால், 13 நாள் இளவயது நாற்று, சதுர நடவு முறை, கோனோமீட்டர் மூலம் களையெடுத்தல் போன்றவை முக்கிய தொழில் நுட்பங்களாகும்.

தற்போது விதைப்புக்கு ஏற்ற ஏ.டி.டி., 33, 36, 43, 45 ஆகிய வெள்ளைப் பொன்னி மற்றும் ஐ.ஆர். 20 போன்ற நெல்ரகங்கள் நாமக்கல் மாவட்ட வேளாண் விரிவாக்க மையங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவ்விதைகள் கிலோவுக்கு 5 சதவீதம் மானிய விலையில்

வினியோகம் செய்யப்படுகிறது.செம்மை நெல் சாகுபடி முறை மற்றும் பாய் நாற்றங்கால் தயாரிப்பு பற்ற ஒவ்வொரு கிராமத்திலும் வேளாண்துறை அலுவலர்கள் நேரில் வந்து செயல் விளக்கமாக காட்டப்பட உள்ளனர். விதைகளை பெற அருகில் உள்ள வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அமராவதி பாசன வாய்க்காலில் நீர் வரத்து : மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடிக்கு சாதகம்**

கரூர்: தென்மேற்கு பருவமழை காரணமாக அமராவதியில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. "மஞ்சள் சாகுபடிக்கு பயனளிப்பதாக அமைந்துள்ள பாசனம், ஆகஸ்டிலும் தொடர வேண்டும்' என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.அமராவதி பாசனம் மூலம், கரூர் மாவட்டத்தில் மட்டும் 13 ஆயிரத்து 51 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடக்கிறது. பாலாறு. பொருந்தலாறு, பரப்பலாறு, வட்டமலைக்கரை, குடகனாறு, குதிரையாறு ஆகியவற்றில் அணை கட்டப்பட்டுள்ளதால், அமராவதியில் நீர் வரத்து குறைந்து, கடைமடைப்பகுதியில் நீர் அளிப்பதில் சிக்கல் நீடிக்கிறது. அணையின் மொத்த கொள்ளளவான 90 அடியில் நேற்று நிலவரப்படி 47.9 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு நொடிக்கு 2,610 கனஅடி தண்ணீர் வரத்து உள்ளது. அணையில் கடந்த ஏழு நாட்களாக குடிநீர் மற்றும் பாசன வசதிக்காக 1,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது ஆற்றில் 300 கன அடி, வாய்க்கால் பாசனத்துக்கு 440 கன அடி, பள்ளப்பாளையம் மற்றும் நாமக்கல் மாவட்டத்துக்கு தலா 25 கன அடி என தண்ணீர் அளிக்கப்படுகிறது.

அமராவதி அணை திறக்கப்பட்டு நேற்று முன்தினம் கரூர் வந்தடைந்த தண்ணீர், தற்போது ராஜவாய்க்காலில் பாசனத்துக்கு திறக்கப்பட்டுள்ளது.பள்ளபாளையம் ராஜவாய்க்கால் பாசன விவசாயிகள் சங்க தலைவர் பழனிசாமி கூறியதாவது: கரூர் மாவட்டத்துக்கு அமராவதி தண்ணீர் அளிப்பதில் எப்போதும் சாதகமான நிலை இருந்ததில்லை. கோவை மாவட்டத்துக்குதான் சாதகமாக உள்ளது. சரியான நேரத்தில் பாசனத்துக்கு தண்ணீர் அளிக்காமல், பல நேரங்களில் பாசன நீர் இல்லாமல் சாகுபடி பாதிக்கப்படுவது வழக்கம்.தற்போது மேற்குதொடர்ச்சி மலையில் பெய்யும் பருவமழை காரணமாக, குடிநீர் தேவைக்கு அணையில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனுடன் சேர்த்து விவசாயத்துக்கும் சிறிது கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது பள்ளபாளையம் ராஜவாய்க்காலில் பாசனத்துக்கு தண்ணீர் விடப்பட்டுள்ளதால், அமராவதி கரையில் மஞ்சள் மற்றும் வெங்காயம் விவசாயத்துக்கு பயனுள்ளதாக அமையும். இதே போல், ஆகஸ்ட் இறுதியிலும் தண்ணீர் திறக்கப்பட்டால் விவசாயத்துக்கு பலனாக அமையும்.அதே சமயம், பள்ளபாளையம் பாசன வாய்க்கால் முழுமையாக சீரமைக்கப்படாமல் உள்ளது குறித்து

பொதுப்பணித்துறையினர் கண்டுகொள்ளவில்லை. ஆண்டாங்கோவில் மேல்பாகம் முதல் பஞ்சமாதேவி வரை பாசன வாய்க்கால் பராமரிக்கப்படாமல் கிடக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**மழையில் காய்கறி பயிரிடுங்கள் தோட்டக்கலைத்துறை பரிந்துரை**

லாலாபேட்டை: "கரூர் மாவட்டம் கிருஷ்ணராபுரம் பகுதியில் தற்போதுள்ள மழையை பயன்படுத்தி விவசாயிகள் காய்கறி பயிரிடலாம்' என, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.அறிக்கையில் உள்ளதாவது:ஆடிப்பட்டம் மழை பெய்வதால், குறைந்த வயதுடைய காற்கறி பயிர் சாகுபடி செய்து விவசாயிகள் அதிக வருமானம் பெறலாம். தற்போது குறைந்து வரும் நிலப்பரப்பில், குறைந்த மண் வளத்தை பயன்படுத்தி காய்கறி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். குறுகிய வயதுடைய, அதிக மகசூல் தரக்கூடிய பயிர்களை சாகுபடி செய்து அதிக வருவாய் பெறமுடியும். தக்காளி, வெண்டை, மிளகாய், பாகல், பீர்க்கன், புடலை, சுரைக்காய் போன்றவற்றை அதிக அளவில் சாகுபடி செய்யலாம்.பழமரக்கன்றுகளை பொறுத்தவரை மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை ஆகியவை ஜூலை மதல் நவம்பர் வரை நடவுக்கு ஏற்ற பருவம். 50 சதவீத மானிய விலையில் பழமரக்கன்று விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகள் தோட்டக்கலைத்துறை அலுவலரிடம் தேவைக்கு பதிவு செய்து, வாங்கி பயனடையலாம்.

**வேளாண் கூட்டுறவு வங்கிகளின் ஆவணங்கள் தணிக்கை**

ராமநாதபுரம்:மாவட்டத்தில் வேளாண் கூட்டுறவு வங்கிகளால் ஏற்படும் குழப்பங்கள் அதிகரித்து வருவதால், அனைத்தின் ஆவணங்களையும் தணிக்கை செய்ய வேண்டியது அவசியம் எழுந்துள்ளது.விவசாயத்தில் பின்தங்கிய மாவட்டம் என்பதால், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடு இங்கு அவசியமாக உள்ளது. பயிர் கடன் உள்ளிட்ட பல்வேறு பயன்பாடு இருப்பதால், விவசாயிகளுக்கு இந்த வங்கி சேவை தவிர்க்க முடியாததாக உள்ளது.

விவசாயிகளின் இந்த கட்டாயத்தை புரிந்து கொண்டு சில வங்கிகளில் வரக்கூடிய அரசின் நிதி தவறாக பயன்படுத்தப்படுவதாக குற்றசாட்டு இருந்து வருகிறது. குறிப்பாக உரங்களுக்கு வழங்கப்படும் மானியத்தொகை, பயிர் கடன் தள்ளுபடியில் குளறுபடி, பயிர் காப்பீடு திட்டத்தில் முறைகேடு என அடுக்கடுக்கான குற்றசாட்டுகளில் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள்

நிரம்பி வழிகின்றன. பெரும்பாலும் புறநகர் பகுதிகளில் அமைந்துள்ளதால் உயர் அதிகாரிகளின் பார்வையிலிருந்து தவறிவிடுகின்றன.

இதையே தங்களின் சாதகமாகவும் பயன்படுத்திக்கொள்ளும் இது போன்ற வங்கிகளின் ஊழியர்கள், தங்கள் விருப்பத்துக்கு விளையாடி வருகின்றனர். மாவட்டத்தில் அதிகரித்து வரும் இந்த புதிய குளறுபடிக்கு யார் முடிவு கட்டப்போவது என்ற குழப்பத்தில் விவசாயிகள் விழிபிதுங்கியுள்ளனர். பணபரிமாற்றம் நடக்கும் என்பதால் நாளைய தேவையை நினைத்து முறையிடவும் அஞ்சுகின்றனர். ஒரு கட்டத்தில் குளறுபடிகள் அதிகரித்ததால், பாதிக்கப்பட்ட பலரும் தற்போது புகார் படலத்தை தொடங்கியுள்ளனர்.

திங்களன்று நடக்கும் மக்கள் குறைதீர் கூட்டத்தில் புகார் தெரிவிக்க வருபவர்களில் விவசாயிகளின் எண்ணிக்கை தான் தற்போது அதிகமாக உள்ளது. இதில் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் குறித்த புகார்களே அதிகம். இவ்வளவு குளறுபடிகள் ஏற்படும் வரை யாரும் கண்டுகொள்ளவில்லை என்றால், "சம்திங் சம்திங்' சந்தேகம் அதிகரிப்பதில் வியப்பில்லை.

விவசாயிகளை தொடர்ந்து பொதுமக்களுக்கும் இந்த சந்தேகம் வலுத்து வருவதால், ரேஷன், காஸ் வினியோக குறைதீர் கூட்டங் களை போல தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கும் குறைதீர் கூட்டங்கள் நடத்த வேண்டும். மேலும் வங்கிகளின் ஆவணங்களை முறையான தணிக்கை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பருவ மழை ஏமாற்றியதால் விவசாயிகள் அதிர்ச்சி**

கிணத்துக்கடவு: கிணத்துக்கடவு பகுதிகளில் பருவ மழை ஏமாற்றியதால், மானாவாரி விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.கிணத்துக்கடவு பகுதிகளில் ஆண்டுதோறும் ஆடிப்பட்டத்தில், பருவ மழையை பயன்படுத்தி 500 எக்டரில் தக்காளி சாகுபடி செய்வது வழக்கம். ஆனால், இம்முறை வழக்கமாக பெய்ய வேண்டிய பருவமழை ஏமாற்றியதால், மானாவாரி விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.வழக்கமாக, ஜூன் மாதம் முதல் ஆகஸ்டு மாதம் வரை பருவ மழை இடைவிடாது பெய்யும். இம்மழை யை பயன்படுத்தி மானாவாரி மற்றும் தோட்ட விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்ய துவங்கி விடுவர். இம்முறை பருவ மழை கடந்த மாதம் நான்கு நாட்களும், இம்மாதத்தில் 2 நாட்களும் மட்டுமே பெய்துள்ளது.முதலில் பெய்த மழையை நம்பி மானாவாரி விவசாயிகள் உழவு பணியை முடித்து விட்டனர்.

ஆனால், போதிய மழை இல்லாத காரணத்தால், ஆடிப்பட்டத்தில் விதைப்பு செய்ய வேண்டிய தக்காளி சாகுபடி நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், மானாவாரி நிலங்கள் தரிசு நிலமாக விவசாயிகள் விட்டுள்ளனர். இதனால், இப்பகுதியில், கடந்த ஆண்டை விட 300 எக்டர் மானாவாரி நிலங்களில் தக்காளி சாகுபடி செய்ய துவங்கவில்லை. இதனால், தக்காளி விலை வரும் மூன்று மாதங்களுக்கு பின் பலமடங்கு உயரும் அபாயம் உள்ளது.ஆடி மாதம் துவங்கிவிட்டது. ஆடி 18 வரையாவது மழை பெய்யுமா என்று விவசாயிகள் ஏக்கத்துடன் உள்ளனர்.

**வரத்து அதிகரிக்கும் வாய்ப்பு தக்காளி விலை திடீர் சரிவு**

உடுமலை: உடுமலை தினசரி காய்கறி சந்தையில், ஒரு மாதத்திற்கும் மேலாக விலை உயர்ந்து காணப்பட்ட தக்காளி விலை திடீரென சரிந்துள்ளது. உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஆண்டு முழுவதும் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. தக்காளி வரத்து அதிகரித்ததால், கடந்த சில மாதங்களாக விலை இல்லை. ஒரு கிலோ தக்காளி 5 ரூபாய்க்கு குறைவாகவே விற்றது. கோடை வறட்சி காரணமாக தக்காளி சாகுபடி குறைந்தது. வரத்து குறைந்துள்ளதால், தக்காளி விலை அதிகரித்து வருகிறது. வரத்து குறைந்துள்ள நிலையில், விலை ஏறியுள்ளது. தக்காளி பெட்டி 350 ரூபாய்க்கும், கிலோ ரூ.36க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வரத்து குறைந்து காணப்பட்டதால், மேலும் விலை உயரும் வாய்ப்பு நிலவியது. இந்நிலையில், தினசரி காய்கறி சந்தையில், தக்காளி விலை மீண்டும் குறைந்துள்ளது.

தினசரி காய்கறி சந்தை வியாபாரிகள் கூறியதாவது:தக்காளி வரத்து குறைந்து, வெளியூர் வியாபாரிகள் அதிகளவு தக்காளி கொள்முதல் செய்கின்றனர். தேவை அதிகரிப்பால் விலை உயர்ந்தது. ஒரு மாதத்திற்கும் மேலாக தக்காளி விலை குறையாமல், 30 முதல் 36 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. 24 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. வரத்து அதிகரித்தால், விலை குறைய வாய்ப்புள்ளது என்றனர்.

**நெகமம் கொப்பரை ஏலம்: கிலோ ரூ.32.80**

பொள்ளாச்சி: நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 32.80 ரூபாய் விலை கிடைத்தது.நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 8 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 39 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத்தம் நான்கு வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட

கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 10 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 29.60 ரூபாய் முதல், அதிகபட்சம் 32.80 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 29 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 21 ரூபாய் முதல், அதிகபட்சம் 29.50 ரூபாய் வரை விலை கிடைத்தது.அதிகாரிகள் கூறுகையில், "பொள்ளாச்சி சுற்றுப்பகுதியில் மழை பெய்வதால், கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் ஏலத்திற்கு கொப்பரை வரத்து குறைந்துள்ளது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை விலையில் 70 பைசா உயர்ந்துள்ளது. முதல் கொப்பரை வரத்து குறைந்து, ஈரப்பதம் அதிகமுள்ள இரண்டாம் தர கொப்பரை வரத்து அதிகமாக இருந்தது' என்றனர்.

**பெரியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் இரண்டு அடி உயர்வு**

கூடலூர்:பெரியாறு அணை நீர்பிடிப்பில் பெய்த கன மழையால் நீர்மட்டம் ஒரே நாளில் இரண்டு அடி உயர்ந்துள்ளது. இதனால் தமிழகப்பகுதிக்கு திறந்து விடும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் தென்மேற்கு பருவ மழை முன்கூட்டியே துவங்கிய நிலையிலும் பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லை.

அவ்வப்போது பெய்த மழையால் அணையின் நீர்மட்டம் சிறிது சிறிதாக உயர்ந்து வந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு பெய்த கன மழையால் அணைக்கு நீர்வரத்து வெகுவாக உயர்ந்து விநாடிக்கு 4826 கன அடியாக இருந்தது. இதனால் நேற்று முன்தினம் 117.10 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் இரண்டு அடி உயர்ந்து நேற்று காலை நிலவரப்படி 119 அடியானது. அணையில் நீர் இருப்பு 2448 மில்லியன் கன அடியாகும். நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது.

நீர்திறப்பு அதிகரிப்பு: அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து தமிழகப் பகுதிக்கு நீர் திறப்பு 1025 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நீர்திறப்பு அதிகமாகி யுள்ளதால் லோயர்கேம்ப் மின்நிலையத்தில் மின் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. மழையளவு (மி.மீ.,): பெரியாறு 38.2, தேக்கடி 33, கூடலூர் 11, சண்முகாநதி 3.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

தேனி:தேவதானப்பட்டியில் ஒருங்கிணைந்த நீர் வடிப்பகுதி மேலாண்மை திட் டத்தில் விவசாயிகளுக் கான பயிற்சி முகாம் கலெக்டர் முத்துவீரன் தலைமையில் நடந்தது. தரிசு நிலங்களை மேம் படுத்தி, நீர் வள, நிலவளங்களை பெருக்கவும், மழைநீர் சேமிப்பு, குளங்கள் தூர்வாருதல், தடுப்பணைகள் அமைத் தல், பண்ணை குட்டை, கசிவு நீர் குட்டை, தாவர வரப்புகள், பழ மரக்கன்றுகள் அமைத்து விவசாயிகள் வாழ்வாதாரம் பெருக ஆலோசனை வழங்கப் பட்டது.

5000 எக்டேரில் ஆறுகோடி ரூபாய் மதிப் பீட்டில் திட்ட அறிக்கை தயாரித்து பத்து நீர் வடிப்பகுதி விவசாயிகள் குழுக்கள் மூலம் செயல்படுத்த மக்கள் பங்கேற்பு நிகழ்ச்சி நடந்தது. விவசாய துறை துணை இயக்குனர் செல்லத்துரை, கலெக்டர் நேர்முக உதவியாளர் ராமகிருஷ்ணன், தேவதானப்பட்டி ஊராட்சி தலைவர் குணசேகரன், செனார்டு தொண்டு நிறுவன நிர்வாக இயக்குனர் தங்கமுத்து சமூகவியலர் பிரபாகரன் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.மாவட்ட நீர் வடிப்பகுதி மேம்பாட்டு முகமை உதவி பொறியாளர் செல்லமுத்து நன்றி கூறினார்.

**மலர் சாகுபடி திட்டத்தில் ஊழல் குற்றச்சாட்டு : போராட்டம் நடத்த மாவட்ட அ.தி.மு.க., முடிவு**

ஊட்டி: "மலர் சாகுபடி திட்டத்தில் நடந்துள்ள ஊழல்களை குறித்து நேர்மையான விசாரணை நடத்தவில்லை எனில், அ.தி.மு.க., சார்பில் போராட்டம் நடத்தப்படும்,' என தெரிவிக்கப்பட்டுள்ளது.நீலகிரி மாவட்ட அ.தி.மு.க., மாவட்ட செயலர் செல்வராஜ், அவை தலைவர் தேனாடு லட்சுமணன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை: நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டு, தேயிலை சிறுவிவசாயிகள் அன்றாட வாழ்க்கையை நடத்த முடியாத கால கட்டத்தில், அ.தி.மு.க., பொதுசெயலர் ஜெயலலிதா விவசாயிகளுக்கு மானியம் வழங்கினார். இதனை தொடர்ந்து, குன்னூரில் கம்ப்யூட்டர் ஏல மையம், சிறு விவசாயிகளின் நன்மைக்காக மாற்று பயிர் திட்டமாக கொய்மலர் சாகுபடி திட்டம் கொண்டு வந்தார். இதனால், பல விவசாயிகள் மலர் சாகுபடியில் ஈடுபட்டனர். இதனால், இவர்களுக்கு மானியத்துடன் கடனுதவி வழங்கவும் வழி செய்தார்.

சிறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் மலர்களை ஊட்டியிலேயே விற்பனை செய்யும் வகையில், பல கோடி ரூபாய் மதிப்பில் மலர் ஏற்றுமதிக்கான ஏல மையம் துவக்கினார். அ.தி.மு.க., ஆட்சிக்கு

பின்னர் மலர் சாகுபடி திட்டத்தில் மெல்ல,மெல்ல தொய்வு ஏற்பட்டது. தி.மு.க., ஆட்சியில் மலர் சாகுபடி திட்டத்துக்கு எந்தவிதமான ஆர்வமும் காட்டவில்லை. பசுந்தேயிலைக்கான விலையும் மீண்டும் வீழ்ச்சியடைந்து, சிறு விவசாயிகள் செய்வதறியாது திகைத்து வருகின்றனர்.அ.தி.மு.க., ஆட்சியின் போது, சிறு விவாசாயிகளுக்கு என துவக்கப்பட்ட இத்திட்டம் தற்போது, பணம் படைத்தவர்களின் கையில் சிக்கி சீரழிந்து வருகிறது.

மத்திய அரசால் வழங்கப்படும் மானியத்துக்கு 20 சதவீதம், 30 சதவீதம் என சில அதிகாரிகளுக்கு சிறு விவசாயிகள் கமிஷனை கப்பம் கட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, குன்னூர், கோத்தகிரி ஆகிய பகுதிகளில் பல விவசாயிகள் கமிஷன் பிரச்னையில் சிக்கி தவித்து வருகின்றனர். இது தொடர்பாக, பல்வேறு புகார்களையும் அளித்து விசாரணை நடந்து வருகிறது. இதற்கு ஆளுங்கட்சியினரும் உடந்தையாக செயல்பட்டு வருகின்றனர். இதில், சம்பந்தப்பட்டுள்ள ஊழல் அதிகாரிகள் குறித்து நேர்மையான விசாரணை நடத்தி, சட்டத்தின் முன் அவர்கள் நிறுத்தப்பட வேண்டும். மீண்டும் மாற்றுப்பயிர் திட்டமான கொய்மலர் சாகுபடி மிக சிறப்பாக செயல்பட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில், அ.தி.மு.க.,பொது செயலரின் ஆணையை பெற்று, ஊட்டியில் மாபெரும் போராட்டம் நடத்தப்படும்.இவ்வாறு செல்வராஜ், தேனாடு லட்சுமணன் ஆகியோர் கூறியுள்ளனர்.

**சிவப்பு சிலந்தி தாக்குதல் நிறமாறுது பசுந்தேயிலை**

மஞ்சூர்: போதுமான மழை இல்லாத காரணத்தினால், சிவப்பு சிலந்தி தாக்குதலால் அதிகரித்து பசுந்தேயிலை மகசூல் குறைந்து வருகிறது.மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஜனவரி மாதம் முதல் மழை இல்லாததால் தேயிலை விவசாயத்திற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை ஏற்படவில்லை. இதையடுத்து வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி ஊடுருவ துவங்கியது.மஞ்சூர், மட்டக்கண்டி, ஓணிக்கண்டி, கீழ்குந்தா, கண்டிஒலா, பென்ஸ்டாக், காத்தாடிமட்டம், பெங்கால்மட்டம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் சிவப்பு சிலந்தி தாக்குதல் அதிகளவில் காணப்பட்டது.

தேயிலை செடிகளில் அதிகளவில் படர்ந்ததால் தேயிலை பறிக்க செல்லும் தொழிலாளர்களுக்கும் ஒரு வித அலர்ஜி ஏற்பட்டு வருகிறது.இதனால், மகசூலும் வெகுவாக குறைந்துள்ளது. கடந்த 2 வாரங்களுக்கு முன்பு 3 நாட்கள் பரவலாக மழை பெய்தது. இந்த மழைக்கு சிவப்பு சிலந்தி

தாக்குதல் துளிக்கூட குறையவில்லை. மகசூலும் அடியோடு குறைந்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**பசுந்தேயிலை விலை வீழ்ச்சி 26ல் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

கோத்தகிரி: பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டி வலியுறுத்தி வரும் 26ம் தேதி கோத்தகிரியில் ஆர்ப்பாட்டம் நடக்கிறது. விவசாய சங்க மாவட்ட தலைவர் பெள்ளி வெளியிட்டுள்ள அறிக்கை:நீலகிரி மாவட்ட மக்களின் ஜீவாதார பிரச்னையான பசுந்தேயிலைக்கு கடந்த சில மாதங்கள் தொடர் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.கடந்த பல மாதங்களாக தேயிலை தொழிற்சாலைகள் தேயிலை வாரிய சட்டப்படி, 65:35 விகிதாச்சாரம் படி கிடைக்க வேண்டிய விலையை விவசாயிகளுக்கு தொழிற்சாலைகள் வழங்கவில்லை.இது தொடர்பாக, தேயிலை வாரிய செயல் இயக்குனர், கதர்வாரியத்துறை அமைச்சர், வருவாய் துறை அலுவலர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகளின் கூட்டம் நடத்தப்பட்டது.இக்கூட்டத்தில்,"கடந்த மாதங்களில் விவசாயிகள் வினியோகித்த பசுந்தேயிலைக்கு குறைந்தபட்சம் ஒரு கிலோவுக்கு 8 ரூபாய்க்கு மேல் தரலாம்,' என தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அத்தொகையை சில தொழிற்சாலைகள் தராமல் விவசாயிகளை ஏமாற்றி வருகின்றன.அந்த நிலுவை தொகையை உடனடியாக வழங்க வேண்டும்; நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கையான பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கோத்தகிரி மார்க்கெட் திடலில், காலை 11.00 மணிக்கு நடக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள், வியாபாரிகள், மகளிர் சுய உதவிக்குழுவினர், அனைத்து விவசாய சங்கங்கள், அமைப்புகள் உட்பட பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டும். இவ்வாறு பெள்ளி கூறியுள்ளார்.

**மக்காச்சோள விதை பாக்கெட் இலவசம்**

வடமதுரை:புதிய ரக மக்கா சோள பயிர் சாகுபடியை அதிகரிக்கும் நோக்கில் மக்கா சோள (விதை பாக்கெட்) மினி கிட்டுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. வடமதுரை வட்டாரத்தில் பி.இ.எம்.எச்.-5, பயோ-9637 ரகங்கள் மினிகிட்டு களாக தயாரிக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகிறது. மக்காசோள சாகுபடி ஆர்வமுள்ள விவசாயிகள் வடமதுரை வோளாண்மை விரிவாக்க

அலுவலகத்தில் தங்களது பெயர், நிலத்தின் சர்வே எண்ணை தெரிவித்து மினிகிட்டுகளை பெற்று பயன்பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**விலை கூடும் மல்லிகை**

மதுரை : மதுரையில் மல்லிகை வரத்து குறைந்துள்ளதால், மீண்டும் விலை அதிகரித்துள்ளது. பூ வியாபாரிகள் சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன் கூறியதாவது :கடந்த மாதம் மல்லிகை வரத்து அதிகம் இருந்ததால், கிலோ 20 ரூபாய்க்குகூட விற்கப்பட்டது. தற்போது சீசன் முடியும் நிலையில் இருப்பதால் விலை அதிகரித்து உள்ளது. நேற்று கிலோ 100 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மதுரைமல்லிகைக்கு பதில் மெட்ராஸ் மல்லி வரத்து ஆரம்பித்துள்ளது. கிலோ 120 ரூபாய்க்கு விற்கப் பட்டது.சம்பங்கி 40-50 ரூபாய், ரோஜா 30, கோழிக் கொண்டை 30, அரளி 20-25, கனகாம்பரம் 150, மரிக்கொழுந்து 25, முல்லைப்பூ 120-150 ரூபாய்க்கு விற்கப்பட்டது என்றார்.

**அரிசி விலை மாற்றமில்லை**

மதுரை : மதுரைக்கு பல்வேறு பகுதிகளில் இருந்தும் நெல் வரத்து சீராக இருப்பதால், இந்த வாரமும் அரிசி விலையில் மாற்றம் ஏற்படவில்லை.மதுரை அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது :கர்நாடக பொன்னி பழசு 38.50 ரூபாய், புதுசு 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. டீலக்ஸ் பொன்னி பழசு 32.50 ரூபாய்க்கும், புதுசு 25 ரூபாய்க்கும், வெள்ளை பொன்னி பழசு 35.50, புதுசு 27க்கும், செல்லப் பொன்னி பழசு 23.50, புதுசு 21க்கும் விற்கப் பட்டது.ஐ.ஆர். இருபது பழசு 23 ரூபாய், புதுசு 21லிருந்து 22 ரூபாய், ஐ.ஆர். 36 பழசு 22 ரூபாய், புதுசு 20லிருந்து 21 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பச்சரிசி சூப்பர் சன்னம் முதல் ரகம் 37 ரூபாய், அடுத்த ரகம் 30, புதுசு 28லிருந்து 29 ரூபாய், மாவு பச்சரிசி பழசு 21, பிரியாணி அரிசி முதல் ரகம் 53, அடுத்த ரகம் 52, 50 ரூபாய்க்கும், புதுசு 46 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது என்றார்.

**.பாமாயில் விலை மீண்டும் உயர்வு**

மதுரை : தூத்துக்குடி துறைமுகத்தில் பாமாயில் இருப்பு குறைந்துஉள்ளதால், மதுரையில் மீண்டும் விலை அதிகரித்துள்ளது.எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது :கடந்த வாரம் 660 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின் பாமாயில் நேற்று 675 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ரைஸ்பிரான் ஆயில் 675 ரூபாயில் இருந்து 685 ரூபாய்க்கும், வனஸ்பதி 740 ரூபாயில் இருந்து 760 ரூபாய்க்கும், சூரியகாந்தி எண்ணெய் 800 ரூபாயில் இருந்து

820 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.கடலை எண்ணெய் 1230 ரூபாய், தேங்காய் எண்ணெய் 990, நல்லெண்ணெய் 1150, தும்பை நல்லெண்ணெய் 1600 ரூபாய் என்பதில் மாற்றமில்லை என்றார்.

**மானியம் பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

பொங்கலூர் : தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தில், பொங்கலூர் வட்டாரத்துக்கு 16 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.பொங்கலூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் மணிமாறன் அறிக்கை:தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் 2010-11ம் ஆண்டில் பழப்பயிர்களின் பரப்பை அதிகரிக்கும் நோக்குடன், பெருநெல்லி புதிய தோட்டம் அமைக்கும் விவசாயிகளுக்கு, எக்டருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. ஐந்து எக்டர் பரப்புக்கு மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மா சாகுபடி செய்ய 9,900 ரூபாய், வாழை சாகுபடி செய்ய 16 ஆயிரத்து 875; திசு வளர்ப்பு வாழை சாகுபடிக்கு 31 ஆயிரத்து 200; நெல்லி, மா பயிரிடும் விவசாயிகளுக்கு இரண்டாம் ஆண்டு 4,500; நெல்லி சாகுபடி செய்ய மூன்றாம் ஆண்டு 6,750; உதிரி மலர் சாகுபடி செய்ய 12 ஆயிரம்; மஞ்சள் சாகுபடி செய்ய 12 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படுகிறது.கோகோவுக்கு முதல் ஆண்டில் 12 ஆயிரம்; இரண்டாம் ஆண்டில் 2,250; மூன்றாம் ஆண்டில் 3,375 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. மண்புழு உரம் தயாரிக்க யூனிட் ஒன்றுக்கு 5,000; ஒருங்கிணைந்த உர நிர்வாகத்துக்கு 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

மானியம் கேட்டு விண்ணப்பிக்கும் விவசாயிகள், பாஸ்போர்ட் சைஸ் போட்டோக்கள் இரண்டு, கம்ப்யூட்டர் சிட்டா, அடங்கல், ரேஷன் கார்டு நகல் ஆகியவற்றுடன் பொங்கலூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்யலாம். முதலில் வருவோருக்கு முன்னுரிமை அடிப்படையில் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும், என்று கூறியுள்ளார்.

**நிலக்கடலைவரத்து குறைவு**

அவிநாசி: சேவூரில் நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு வரத்து தொடர்ந்து குறைந்து வருகிறது.சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு 37 மூட்டைகளே வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 27 மூட்டை குறைவு. தற்போது விதைப்பு நடவடிக்கைகள் துவங்கியுள்ளதால், வரத்து குறைந்துள்ளது. இந்த வார ஏலத்தில் வந்த ஒரே ரகமான முதல் ரகம் குவிண்டாலுக்கு ரூ.3,540 முதல் ரூ.3,730 வரை ஏலத்தில்

எடுக்கப்பட்டது.ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் நடராஜன் கூறுகையில், ""தற்போது விவசாயிகள் நிலக்கடலையை விதைப்பு செய்து வருகின்றனர். இதனால், நல்ல விலைக்கு ஏலம் போனது. அடுத்த மாதம் சீசன் துவங்க உள்ளதால், இறுதி வாரம் முதல் வரத்து அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்," என்றார்.

**சின்ன வெங்காயம் விலை தொடர்ந்து உச்சம்**

திருப்பூர்: சின்ன வெங்காயத்தின் விலை தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. தக்காளி, பாகல் உள்ளிட்ட மற்ற காய்கறிகள் விலை குறைந்து வருகிறது. தென்னம்பாளையம் மார்க்கெட்டில் நேற்று, பாகல் சிப்பத்துக்கு 70 ரூபாய் வரை குறைந்து 150 ரூபாய் வரை  விற்பனையானது. கத்தரி 80 முதல் 120 வரை; புடலை 50 முதல் 60 வரை; பீர்க்கன் 50 முதல் 100 வரை; தக்காளி கூடை 110 வரை என விற்கப்பட்டது. சின்ன வெங்காயம் மட்டும் சிப்பம் 500 ரூபாய் வரை விற்றது.வடக்கு உழவர் சந்தை நிர்வாக அதிகாரி ராமலிங்கம் கூறியதாவது:தக்காளி மற்றும் கொத்தமல்லி வரத்து அதிகரித்து வருகிறது.

வரும் நாட்களில் மேலும் விலை குறைய வாய்ப்புள்ளது. கத்தரி 10 ரூபாய் முதல் 12 வரை; வெண்டை 14; தக்காளி 23; அவரை 16 முதல் 22 வரை; பீர்க்கன் 13 முதல் 20 வரை; சுரை 8; பாகல் 20; கொத்தவரை 10; பச்சை மிளகாய் 30 மற்றும் 40.சின்ன வெங்காயம் 30 ரூபாய் வரை; பெரிய வெங்காயம் 13; முருங்கை 20 முதல் 25 வரை; தேங்காய் 10; மாங்காய் 25; வாழைக்காய் 18; உருளை 16; மேரக்காய் 16; கேரட் 40; பீட்ரூட் 20; கோஸ் 18; காலிபிளவர் 18; பூண்டு 80; பீன்ஸ் 25; கறிவேப்பிலை 20; கொத்தமல்லி 12; வாழை பழம் 18 ரூபாய் என, விற்கிறது, என்றார்.பூ விற்பனை சரிவு: பூ வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறுகையில், ""பூக்களின் வரத்து அதிகரித்து, விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. விசேஷ காலம் இல்லாததால், விற்பனையில் சரிவு நீடிக்கிறது.

ஜாதி முல்லை கிலோ 140; கனகாம்பரம் 120; மல்லிகை 80; ரோஸ் 60; முல்லை 60; அரளி 40; பட்டுப்பூ 25; சம்பங்கி 20 ரூபாய் என விற்கிறது," என்றார்.பருப்பு விலையில் மாற்றமில்லை: திருப்பூர் மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், ""கடந்த ஒரு வாரத்தில் பருப்பு விலையில் மாற்றம் ஏற்பட வில்லை. பாசிப்பயறு கிலோ 64 ரூபாய்; துவரம் பருப்பு 58 முதல் 70 வரை; கருப்பு உளுந்து 68 முதல் 72 வரை; வெள்ளை உளுந்து 80; பாசிப்பருப்பு 78; தட்டைப்பயறு 36; கொள்ளு 24; சுண்டல் கடலை 32; அஸ்கா 28 ரூபாய்க்கு

விற்கிறது. போதிய அளவு பருப்பு வரத்துள்ளது; எதிர்பார்த்த அளவு விற்பனை இல்லை," என்றார். நல்லெண்ணெய் விலை குறைவு: சமையல் ஆயில் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், ""நல்லெண்ணெய் கிலோவுக்கு மூன்று ரூபாய் குறைந்து கிலோ 82 ரூபாய்க்கு விற்கிறது. சூரியகாந்தி எண்ணெய் வரத்து சற்று சூடுபிடித் துள்ளது. எதிர்பார்த்த விற்பனை இல்லை. விளக்கெண்ணெய் 85; கடலை எண்ணெய் 86; ரீபன்ட் ஆயில் கிலோ 96 ரூபாய்; பாமாயில் 45; சூரியகாந்தி எண்ணெய் 60; தேங்காய் எண்ணெய் 64; நெய் கிலோ 280 ரூபாய்க்கு விற்கிறது," என்றார்.

**மரவள்ளியில் மாவுப்பூச்சி விவசாயிகள் கவலை**

திருப்பூர்: திருப்பூர் சுற்றுப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள மரவள்ளிக்கிழங்கு செடியில் மாவுப்பூச்சி தாக்குதல் பரவி வருகிறது; விவசாயிகள் கவலை அடைந் துள்ளனர். திருப்பூர் அருகே முத்தணம்பாளையம் மற்றும் சுற்றுப்பகுதியில் மரவள்ளிக்கிழங்கு பயிரிடப் பட்டுள்ளது. சில விவசாயிகளின் விளைநிலங்களில் செடி வளர்ச்சி நிலையில் காணப்படுகிறது. தேவை அதிகரித்ததால், கடந்தாண்டை விட இந்தாண்டு, டன் 10 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. தற்போது மாவுப்பூச்சி தாக்குதல் ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.தாக்கப்பட்ட செடியின் இலைகள் பழுத்தும், கருகியும் வருகின்றன. அருகிலுள்ள செடிக்கும் பரவி, முற்றிலும் பயிர்களை அழிக்கும் வாய்ப்பு உருவாகி உள்ளது. துவக்க நிலையில் உள்ள தாக்குதலை தடுக்க, வேளாண் துறை அதிகாரிகளின் உதவியை விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் இக்னேஷியஸ் ரோச் கூறுகையில், ""மாவட்டம் முழுவதும் மாவுப்பூச்சி தாக்குதல் குறித்த அறிக்கை, அரசுக்கு அனுப்ப தயார் செய்யப்பட்டு வருகிறது. நோயை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகள் அந்தந்த வட்டார தோட்டக் கலைத்துறை அதிகாரிகளை அணுகி, தேவையான ஆலோசனை பெறலாம். ஒரு லிட்டர் தண்ணீருடன், 20 மி.லி., வேப்பெண்ணெய் அல்லது பியுரோகுரோன் 2 மி.லி., அல்லது பியுரோபைரிபாஸ் 5 மி.லி., அளவுக்கு கலந்து தெளிக்கலாம்," என்றார்.

**தோட்டப்பயிர் சாகுபடி குறித்து வானொலியில் இன்று விளக்கம்**

ஜூலை 21,2010,00:00 IST

புதுச்சேரி புதுச்சேரி வானொலியில் இன்று ஒலிபரப்பாகும் தொலைப்பாலம் நிகழ்ச்சியில் ஆடிப்பட்டம் தோட்டப்பயிர் சாகுபடி குறித்து விளக்கம் அளிக்கப் படுகிறது. இதுகுறித்து புதுச்சேரி வானொலி நிலைய இயக்குனர் துரைராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:புதுச்சேரி வானொலியில் தொலைபேசி மூலம் நேரடியாக பங்குபெறும் தொலைப்பாலம் நிகழ்ச்சியில் 21ம் தேதி (இன்று) மாலை 5.30மணிக்கு ஆடிப் பட்டத்தில் தோட்டப்பயிர் மற்றும் மானாவாரி பயிர் சாகுபடி செய்வது குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது. புதுச் சேரி காமராசர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் வல்லுனர் விஜயகுமார் மற்றும் தோட்டக்கலை நிபுணர் ஜாகிர் உசேன் ஆகியோர் விளக்கம் அளிக்கின்றனர்.இந்நிகழ்ச்சியில் பங்கு பெற விரும்பும் நேயர்கள் 2275072, 2275073 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**அலகாபாத் சபேத் கொய்யா**

பதிவு செய்த நாள் : ஜூலை 21,2010,00:00 IST



கொய்யா ரகங்களில் அலகாபாத் சபேத் கொய்யாவும் நுகர்வோர்களால் விரும்பப்படுகிறது. சாகுபடி முறைகள்: கொய்யாவில் வருடம் பூராவும் அறுவடை இருந்துகொண்டிருந்தாலும் இரண்டு முக்கிய அறுவடைப் பருவங்கள் உள்ளன. முதல் அறுவடை வைகாசி முதல் ஆவணி

வரையிலும், இரண்டாவது அறுவடை ஐப்பசி முதல் தை வரையிலும் கிடைக்கும். ஒரு மரம் ஒரு வருடத்தில் இரண்டு அறுவடைகளிலும் சேர்ந்து மொத்தமாக 20 கூடை பழங்கள் கொடுக்கும். ஒரு மரம் ஒரு வருடத்தில் 120 கிலோ மகசூல் கொடுக்க வேண்டும். இதை அடைய விவசாயிகள் பாடுபட வேண்டும். கொய்யாவில் மகசூலினை அதிகரிக்க கீழ்க்கண்ட வழிமுறைகள் உதவும்.

**உரமிடல்:** ஆண்டிற்கு இருமுறை அதாவது ஜூன் மாதம் மற்றும் டிசம்பர் மாதம் உரமிட வேண்டும். கொய்யாவில் மகசூல் திறனையும், சுவையினையும் அதிகரிக்க இயற்கை உரங்கள் இடுவதற்குக் கவனம் செலுத்த வேண்டும். நன்றாக வளர்ந்து காய்த்துக் கொண்டிருக்கும் மரங்களுக்கு கீழ்க்கண்ட அளவு உரங்களை மேலே விவரித்தபடி இருமுறை இடவேண்டும். மக்கிய தொழு உரம்-100 கிலோ, அம்மோனியம் சல்பேட்-3 கிலோ, சூப்பர்-2 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ் -2 கிலோ. கொய்யா மரத்திலிருந்து ஒரு மீட்டர் தள்ளி மரத்தைச் சுற்றிலும் மண்வெட்டியால் சிறிது பள்ளம் வெட்டி அதனுள் உரமிட்டு மண்ணால் மூடவேண்டும். விவசாயிகளுக்கு ஆலைக்கழிவு கிடைக்குமாயின் அதனையும் பயன்படுத்தலாம். இதனை ஆலையில் இருந்து பண்ணைக்குக் கொணர்ந்து சில நாள்கள் ஆறப்போட்டு பின் உபயோகிக்கலாம்.

**பாசனம்:** பாசனம் வாரம் ஒரு முறை செய்வது நல்லது. சற்று பாசன வசதி குறைந்த இடத்தில் 15 நாட்கள் இடைவெளியில் செய்யலாம். பாசனம் செய்ய இயலவில்லையெனில் கொய்யா சாகுபடியை கைவிட்டுவிடலாம். முதல் அறுவடை வெயில் காலத்தில் வரும். இந்த அறுவடை முடிந்தவுடன் 15-20 நாட்கள் தற்காலிகமாக பாசனத்தை நிறுத்தவேண்டும். இது தழை மஞ்சளாகி கீழே கொட்ட உதவுவதுடன் செடிக்கு ஓய்வு அளிக்கின்றது. அடுத்து அதிக மகசூல் கொடுக்க செடி தன்னிடத்திலுள்ள ஊட்டச்சத்தினை அதிகப்படுத்திக் கொள்கிறது. இந்த காலத்திற்கு பின் உரம் வைத்து பாசனம் செய்யலாம்.

**இடை உழவு:** கொய்யா மரங்கள் 20 அடி து 20 அடி இடைவெளியில் நடப்பட்டு இருக்கும். மழைக்காலங்களில் செடிகளின் இடையே உழவு செய்வது முக்கியம். இவை, புல், பூண்டுகளை தலைகாட்டாத வண்ணம் செய்வதோடு, மண்ணின் ஈரம் காக்கும் தன்மையினை அதிகரிக்கும்.

**களையெடுப்பது, கொத்துவது:** கொய்யாவிற்கு மரத்தின் அடியில் அகலப்பாத்தி போட்டு அதில் பாசனம் செய்வதோடு, உரங்கள் வைக்கப்படுகின்றன. இந்தப்பாத்தியில் களை முளைக்காமல் இருக்க நன்கு கொத்திவிட்டு வேர்பாகத்தில் காற்றோட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை கவாத்து செய்ய வேண்டும். கொய்யா மரங்களை அதிகமாக படர்ந்து வளர்ந்துவிடாமல் பார்ப்பதற்கு குடை போன்ற உருவம் உள்ளபடி கவாத்து செய்ய

வேண்டும். பழங்களை அறுவடை செய்தபிறகு காய்ந்த குச்சிகள், ""வாட்டர் சக்கர்" என்று சொல்லப்படும் மலட்டுக்கிளைகள் இவைகளை அகற்ற வேண்டும். ஒல்லியாகவும், நீளமாகவும் வளர்ந்த கிளைகளின் நுனிகளைக் கிள்ளிவிட வேண்டும். உடனே கிளையில் புதிய துளிர்கள் தோன்றும். இந்தத் துளிர்களில் காய்கள் பிடிக்கும்.

சில சமயம் கிளைகளின் கீழ் நோக்கி வளைத்து முளையடித்துக் கட்ட வேண்டும். இதனால் கிளையில் துளிர்கள் தோன்றி காய் பிடிக்கும். இளம் செடிகளில் கவாத்து செய்தலுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். கவாத்து செய்தபிறகு காப்பர் ஆக்சி குளோரைடு இரண்டு சதவீதம் உடனடியாக தெளிக்க வேண்டும். கவாத்து செய்தபிறகு மகசூல் அதிகமாக கிடைக்கின்றது. கவாத்து செய்யாவிட்டால் மகசூல் குறைந்துவிடும். வெகு தூரத்திற்கு எடுத்துச் சென்றாலும் பழம் அழுகிவிடுவதில்லை. கொய்யாவினை பேன், தேயிலைக்கொசு, செதிள் பூச்சி, பழ ஈ போன்ற பூச்சிகளும், வாடல் நோய், கன்கர் நோய் போன்ற நோய்களும் தாக்குகின்றன.


பூச்சிகளைக் கட்டுப்படுத்த நுவக்ரான் மருந்தினையும், நோயினைக் கட்டுப்படுத்த டைத்தேன் எம் 45 மருந்தினையும் தகுந்த அளவில் பயன்படுத்த வேண்டும். கொய்யா மரங்களுக்கு மாதம் ஒரு முறை தவறாமல் வேப்பம் பிண்ணாக்கு நீர் கரைசலைத் தெளித்துவந்தால் பூச்சிபாதிப்பு இல்லாமல் இருக்கின்றது. பூச்சிகள் உயிரோடு இருந்தாலும் அவைகள் செடிகளை அழிப்பதில்லை. பட்டினி கிடந்து அழிந்துவிடுகின்றன. பெங்களூருவுக்கு அருகிலுள்ள ஹசர்கட்டா என்ற இடத்தில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் உள்ளது. இந்நிலையம் கொய்யாவில் விழக்கூடிய மாவுப்பூச்சியை அழிக்க உயிரியல் முறையினைக் கண்டுபிடித்துள்ளது. அவர்களை அணுகி முறையினைத் தெரிந்து அனுசரித்து பயன்பெறலாம்.

**பழங்களின் தரத்தை உயர்த்த:** மரங்களில் பூக்கள் மலராமல் மொட்டாக இருக்கும்போது 100 மில்லிகிராம் ஜிப்ரலிக் அமிலத்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து இந்தக் கலவையைத் தெளிக்கும்போது பழங்களில் விதைகள் குறைந்து, பழங்கள் சற்று பெரியதாகி அதிக சுவையினைப் பெறுகின்றன. இக்கலவை மொட்டுகளின் மேல் ஒட்டுவதற்கு டீபால் என்னும் சோப்புக்கலவையை ஜிப்ரலிக் அமிலக் கலவையினுள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

**இயற்கை முறை கறிப்பலா சாகுபடி : நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 21,2010,00:00 IST



இதனுடைய பழங்கள் 25 சதம் மாவுச்சத்தும், கால்சியம், வைட்டமின் ஏ, பி, போதுமான அளவிலும் இருப்பதால் ஆங்கிலேயர்கள் இதனை "பிரெட் புரூட்' என்று அழைத்தனர். தென்னிந்தியாவில் இப்பழம் சமையலுக்கு பயன்படுகிறது. வீட்டு தோட்டங்களில் இதனை வளர்க்கலாம். மண், தட்பவெப்ப நிலை: மேற்கு கடற்கரை ஓரம் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளான நீலகிரி, கீழ்பழநிமலை, வயநாடு, குற்றாலம், ஆனைமலை பகுதிகளில் காணப்படுகிறது. கரிமச்சத்து நிறைந்த செம்பொறை மண் ஏற்றது. காற்றின் ஈரப்பதம் மிகுந்தும், சூடான தட்பவெப்பமும் இதன் வளர்ச்சிக்கு ஏற்றது. ஆண்டு மழையளவு 2000-2500 மி.மீ. உள்ள இடங்களில் நன்கு வளர்கிறது.

**வகைகள்:** 1. விதையுள்ளது, 2. விதைஅற்றது. விதையுள்ள வகைகள் சமையலுக்கு ஏற்றதல்ல. விதைகளை வேகவைத்தோ, சுட்டோ சாப்பிடலாம். விதையற்ற வகைகளே பொதுவாக சாகுபடி செய்யப்படுகிறது. விதையில்லா வகைகள் 20 செ.மீ. நீளம், 2.5 செ.மீ. விட்டம் கொண்ட வேர்த்தண்டுகள் மூலமாக பயிர் பெருக்கம் செய்யப்படுகிறது. வேர்த்தண்டுகளை செங்குத்தாக இல்லாமல் படுக்கை முறையில் நடவு செய்ய வேண்டும். நடவின்போது ஒரு மரத்திற்கு 10 கிலோ நன்கு மக்கிய தொழுஉரம் இடவேண்டும்.

**நீர்பாசனம்:** நடவு செய்த முதல் 2 மாதங்களுக்கு தினமும் 8-10 லிட்டர் தண்ணீரும், அதன்பிறகு 2 வருடம் வரை 10-20 லிட்டர் தண்ணீரும் தேவைப்படும். மழைக்காலங்களில் நீர் பாய்ச்ச வேண்டிய அவசியமில்லை.

**உரமிடுதல்:** வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கும்போது ஒரு மரத்திற்கு 10 கிலோ நன்கு மக்கியதொழு உரம் இட்டால் போதுமானது.
பின்செய் நேர்த்தி: களைகளை அவ்வப்போது நீக்க வேண்டும். மரத்தின் அருகே ஆழமாக செலுத்தினால் வேர்கள் பாதிக்கப்படும். ஊடுபயிர்: காற்றின் ஈரப்பதம் அதிகமாக உள்ள இடங்களில் ஊடுபயிராக இஞ்சி, மிளகு, வெனிலா ஆகியவற்றை பயிரிடலாம்.

நோய்: பழங்களைத் தாக்கும் மென்மையழுகல் நோயானது பழங்களை அழுகச் செய்து மரத்திலிருந்து உதிரச் செய்கிறது. இதனைக் கட்டுப்படுத்த தசகவ்யா என்ற இயற்கை கலவையை தெளிக்க வேண்டும்.

**அறுவடை:** நடவு செய்த 5 முதல் 6 வருடங்களில் காய்களை அறுவடை செய்யலாம். காய்பிடிப்பை அதிகரிக்க கையால் மகரந்த சேர்க்கை செய்ய வேண்டும். காலை 7 மணி முதல் 10 மணி வரை பூவடிச் செதிலிலிருந்து பெண் மஞ்சரியானது விரிகிறது. அதிலுள்ள ஒவ்வொரு பூக்களும் படிப்படியாக திறக்க 72 மணி நேரம் எடுத்துக் கொள்கின்றன.
ஒரு ஆண் மஞ்சரியை ஒரு பெண் மஞ்சரியின் அருகே எடுத்துச் சென்று மகரந்தத்தைப் பெண் மஞ்சரியின் சூல்முடியின்மீது வைத்து மென்மையாகத் தேய்க்க வேண்டும். பெண் பூ திறந்த 3 நாட்களுக்குள் மகரந்தச் சேர்க்கை செய்துவிட வேண்டும். பெண் மஞ்சரியில் உள்ள அனைத்துப் பூக்களும் ஒரே சமயத்தில் திறப்பதில்லை. எனவே மகரந்தச் சேர்க்கையை திரும்பவும் 4 முதல் 5 நாட்களுக்குத் தினமும் செய்துவர வேண்டும். மஞ்சரி விரிந்த 60 முதல் 90 நாட்களில் காய்கள் கிடைக்கின்றன. பழத்தின் நிறமானது பச்சையிலிருந்து மஞ்சள் கலந்த பச்சையாக மாறும்போது பழம் முதிர்ச்சி அடைகிறது. பழங்களை பழுப்பதற்கு முன் அறுவடை செய்தால் சமையலுக்கு பயன்படுத்தலாம்.
ஒரு மரமானது ஒரு வருடத்தில் 50-100 பழங்கள் (25-50 கிலோ) வரை கொடுக்கிறது. நீளமான கம்புடன் கூடிய கொக்கியைக் கொண்டு பழங்களை அறுவடை செய்ய வேண்டும். ஒரு கிலோ பழத்தின் விலை சராசரியாக ரூ.10 என்று எடுத்துக்கொண்டால் ஒரு மரத்திலிருந்து ஒரு வருடத்திற்கு ரூ.250முதல் ரூ.500 வரை மொத்த வருமானமாகப் பெறலாம்.

(தகவல்: க.வி.ராஜலிங்கம், ந.அசோக ராஜா, மு.ப.திவ்யா, வேளாண் காடுகள் துறை, வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், மேட்டுப்பாளையம்-641 301, 04254-222 010, 225 064).

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 21,2010,00:00 IST



புதிய ரக த.வே.ப.க. தக்காளி - வீரிய ஒட்டு3- இந்த ரகம் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. எக்டருக்கு 96.2 டன் பழமகசூல் கொடுக்கக் கூடியது. இது கோடிஎச்.2, லட்சுமி ரகங்களைக் காட்டிலும் முறையே 9.76 மற்றும் 42.24 சதம் கூடுதல் மகசூலாகும். அதிகபட்ச மகசூலாக எக்டருக்கு 129.5 டன் கொடுக்க வல்லது. வயது - 145-150 நாட்கள். பருவம் - பிப்ரவரி-மார்ச், மே-ஜூன், நவம்பர்-டிசம்பர். பயிரிட உகந்த மாவட்டங்கள்: கோவை, சேலம், கடலூர், தஞ்சாவூர், மதுரை, தேனி, காஞ்சிபுரம், தூத்துக்குடி, திண்டுக்கல், திருச்சி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை. சிறப்பியல்புகள்: அடர்நடவு முறைக்கு ஏற்றது. பழங்கள் கொத்தாகவும், (கொத்திற்கு 3-5 பழங்கள்), 55.65 கிராம் எடையுடனும், உருண்டை வடிவிலும் இருக்கும். பழங்களில் 5.58 பிரிக்ஸ் மொத்த கரையும் திடப்பொருளும், 0.73 சதம் புளிப்புச்சுவையும், 35.72 மி.கி/100 கி வைட்டமின் சி சத்தும் அடங்கியுள்ளது. இலைச்சுருள், நச்சுயிரி நோய், வேர்முடிச்சு நூற்புழுவுக்கு மித எதிர்ப்புத்திறன் கொண்டது.

**புதிய ரக கத்தரி:** த.வே.ப.கத்திரி வீ.ஆர்.எம்.1 - தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகம் சமீபத்தில் வெளியிட்டுள்ள கத்தரி வீ.ஆர். எம்.1 என்ற ரகம். எக்டருக்கு 40-45 டன் காய் மகசூல் கொடுக்கிறது. இது பாலூர் 1 ரகத்தைவிட 27 சதம் கூடுதல் மகசூலாகும். வயது - 140-150

நாட்கள், பருவம்- ஆடிப்பட்டம், புரட்டாசி பட்டம், கோடை. பயிரிட உகந்த மாவட்டங்கள்: வேலூர், திருவண்ணாமலை. உருவாக்கம்: இலவம்பாடி கிராமத்திலிருந்து தனித்து தேர்ந்தெடுக்கப்பட்டது. சிறப்பியல்புகள்: அதிக மகசூல், இலை, தண்டு, கத்தரிக்காயில் காம்புப்பகுதியில் முட்கள் உள்ளன. கொத்துக்கொத்தாக காய்க்கக்கூடியது. காய்கள் முட்டை வடிவமானவை. ஊதா நிறக்காய்கள். முனையில் மட்டும் சிறிதளவு பச்சை நிறம் கொண்டவை. இலைப்புள்ளி, வெர்டிசிலியம் வாடல் நோய் மற்றும் எப்பிலாக்னா வண்டுகள் தாக்குதலைத் தாங்கி வளரும் தன்மை கொண்டது.

த.வே.ப.க. மிளகாய் வீரிய ஒட்டு கோ.1- சமீபத்தில் வெளியிடப் பட்டுள்ள ரகமாகும். எக்டருக்கு பச்சை மிளகாய் 28.1 டன். மிளகாய் வற்றல்-6.74 டன் கொடுக்கிறது. இது என்.எஸ்.1701 ரகத்தைவிட பச்சைமிளகாய் 14.65 சதம், மிளகாய் வற்றல் 19.15 சதம் கூடுதல் மகசூலாகும். வயது-195-205 நாட்கள். பருவம்: ஜூன்-ஜூலை, செப்டம்பர்-அக்டோபர், ஜனவரி-பிப்ரவரி. பயிரிட உகந்த மாவட்டங்கள்: கோவை, சேலம், கடலூர், தஞ்சாவூர், மதுரை, தேனி, காஞ்சிபுரம், தூத்துக்குடி, திருச்சி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை. அதிகபட்ச மகசூல்: 129.5 டன்/எக்டர் பச்சை மிளகாய், 34.67 டன்/எக்டர் வற்றல். சிறப்பியல்புகள்: செடிகள் நன்கு படர்ந்து வளரக் கூடியவை. காய்கள் இளம்பச்சை நிறத்துடன் நுனி கூர்மையாகவும், 10.5-12 செ.மீ. நீளமாகவும் காணப்படும். காரத்தன்மை 0.58 சதம், ஓலியோரெசின் 14 சதமும் உள்ளது. வைட்டமின் சி சத்து 120 மி.கி/ 100 கிராம். பழ அழுகல் நோய்க்கு மிக எதிர்ப்புத்திறன்.

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

*தினத்தந்தி*

***சர்வதேச அளவில் உற்பத்தி குறைந்ததால்கோகோ விலை தொடர்ந்து அதிகரிப்பு***



பி.கே.கிருஷ்ணகுமார்

கொச்சி

சர்வதேச அளவில் கோகோவிற்கான தேவைப்பாடு சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. அதேசமயம் இதன் உற்பத்தி குறைந்து போயுள்ளது. இதனால் உள்நாட்டில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் இதன் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

சாக்லெட் தயாரிப்பு

பீன்ஸ் வகையைச் சேர்ந்த கோகோவை சாக்லெட் தயாரிப்பு நிறுவனங்கள் அதிக அளவில் கொள்முதல் செய்கின்றன. இந்தியாவில் சாக்லெட் வகைகள் தயாரிப்பில் முன்னணியில் உள்ள காட்பரி, கேம்ப்கோ ஆகிய நிறுவனங்கள் அதிக அளவில் கோகோவை கொள்முதல் செய்து கொள்கின்றன. உள்நாட்டில் கோகோ அதிகஅளவில் உற்பத்தியாகும் கேரளாவில் பருவமழை தீவிரமடைந்துள்ளதால் ஈரப்பதம் கொண்ட கோகோ தான் சந்தைக்கு வருகிறது. இதனால் இந்நிறுவனங்கள் ஒரு கிலோ கோகோவை ரூ.42–43 என்ற விலையில் வாங்குகின்றன. இது, அண்மையில் ரூ.55–56 என்ற அளவில் இருந்தது.

இதுகுறித்து கேம்ப்கோ நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஏ.எஸ்.பட் கூறும்போது, “கோகோ அதிக அளவில் உற்பத்தியாகும் கேரளா மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் மழை பொழிவால் தரம் வாய்ந்த கோகோ பீன்ஸ்கள் கிடைக்கவில்லை. நன்கு உலர்ந்த நிலையில் உள்ள ஒரு கிலோ கோகோ ரூ.165–170 என்ற அளவில் விலை போய்க்கொண்டுள்ளது. சாக்லெட் தயாரிப்பு நிறுவனங்களுக்கு இது, முக்கிய மூலப்பொருளாக உள்ளது. இதற்கான தேவை ஆண்டுக்கு 20 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது” என்று தெரிவித்தார்.

பற்றாக்குறை

சென்ற 2009–10–ஆம் பருவத்தில் சர்வதேச அளவில் கோகோவிற்கு 69,000 டன் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உலக அளவில் கோகோ அதிக அளவில் உற்பத்தியாகும் ஐவரி கோஸ்ட் மற்றும் கானா ஆகிய நாடுகளில் இவ்வாண்டு கோகோ உற்பத்தி குறைய கூடும் என சர்வதேச கோகோ அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது. உலக அளவில் கோகோ உற்பத்தியில் ஐவரி கோஸ்ட் 40 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ளது. சென்ற 2009–10–ஆம் பருவத்தில் சர்வதேச அளவில் 35.90 லட்சம் டன் கோகோ உற்பத்தியாகி இருக்கும் என மறுமதிப்பீடு செய்யப்பட்டு உள்ளது. இது, முந்தைய ஆண்டின் உற்பத்தியை விட சற்று அதிகமாகும்.

சர்வதேச சந்தை

சர்வதேச சந்தையில் இவ்வாண்டு ஜனவரி மாதம் ஒரு டன் கோகோவின் விலை 3,650 டாலராக இருந்தது. இது, ஏப்ரல் மாதத்தில் 3,001 டாலராக சற்று குறைந்திருந்தது. இந்த நிலையில், ஐவரி கோஸ்ட் நாட்டில் இவ்வாண்டு கோகோ உற்பத்தி குறையும் என்ற நிலைப்பாட்டால் இதன் விலை உயரத் தொடங்கியுள்ளது. குறிப்பாக, ஜூலை 13–ந் தேதி சர்வதேச சந்தையில் ஒரு டன் கோகோவின் விலை 3,256 டாலராக அதிகரித்து

காணப்பட்டது.

இவ்வாண்டு உள்நாட்டில் கோகோ உற்பத்தி, 13,000 டன் என்ற அளவில் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது, முந்தைய பருவத்தை விட அதிகமாகும். தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களில் கோகோ சாகுபடி அதிகரித்து வருவதால் இனிவரும் ஆண்டுகளில் இது, மேலும் அதிகரிக்கும் என முந்திரி மற்றும் கோகோ மேம்பாட்டு இயக்குனரகத்தின் இயக்குனர் வெங்கடேஷ் என்.ஹூபாலி தெரிவித்தார்.

**உலக அளவில் உற்பத்தி சரிவடைந்து வருவதால் மிளகு விலை உயர்கிறது**



எஸ் சனந்தகுமார்

கொச்சி

அளிப்பு குறைந்து வருவதால், சர்வதேச அளவில் மிளகு விலை உயர்ந்து வருகிறது. மிளகு உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடுகளில், நடப்பு ஆண்டில் உற்பத்தி சரிவடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் சென்ற ஆண்டில் 50,000 டன் மிளகு உற்பத்தியானது. நடப்பு ஆண்டில் இந்த அளவைக் காட்டிலும் உற்பத்தி குறையும் என்று கூறப்படுகிறது.

உற்பத்தி சரிவடையும்

உற்பத்தி சரிவடைய உள்ள நிலையில், மிளகிற்கான தேவைப்பாடு மிகவும் அதிகமாக உள்ளது. நடப்பு ஆண்டில், உலகம் முழுவதுமாக 33,000 டன் மிளகிற்கு பற்றாக்குறை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது போன்ற பல்வேறு காரணங்களால் மிளகு விலை உயர்ந்துள்ளது. இந்தியாவிலும் சந்தைகளுக்கு மிளகு வரத்து குறைந்து போயுள்ளதாக தெரிகிறது. தினசரி தேவையில் 50 சதவீதத்தை பூர்த்தி செய்யும் அளவிற்கு கூட மிளகு வரத்து இல்லை என வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார். குறிப்பாக தென் மாநிலங்களில் உள்ள விவசாயிகள் அதிக விலையை எதிர்பார்த்து மிளகை வெளிச்சந்தையில் விற்க மனமின்றி இருப்பு வைத்துள்ளனர். அவர்கள் விரைவில் ஒரு கிலோ மிளகு ரூ.200–ஐ தாண்டும் என எதிர்பார்க்கின்றனர். நம்

நாட்டில் பண்டிகை காலமான அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மிளகிற்கான தேவை உச்சத்திற்குச் செல்லும். எனவே இந்தியாவிலும் மிளகு விலை, குறுகிய கால அடிப்படையில் ஏறுமுகமாகவே இருக்கும் என்ற நிலைப்பாடு உள்ளது.

முன்னணி நாடுகள்

உலக அளவில், வியட்நாம், இந்தோனேஷியா, பிரேசில், இந்தியா ஆகிய நாடுகள் மிளகு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கின்றன. மேற்கண்ட அனைத்து நாடுகளிலுமே அளிப்பு குறைந்துள்ளதால், சர்வதேச சந்தைக்கும் மிளகு வரத்து குறைந்து போயுள்ளது. இதனால் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அனைத்தும் விலையை ஏறக்குறைய ஒரே அளவில் உயர்த்தியுள்ளன. இந்திய மிளகின் விலை டன் ஒன்றுக்கு 4,450 டாலராக உள்ளது. இந்தோனேஷிய மிளகின் விலை 4,400 டாலராகவும், வியட்நாம் மிளகின் விலையும் இதே அளவில் உள்ளது. பிரேசில் நாட்டு மிளகின் விலை 4,350 டாலராக உள்ளது.